GCG2-2-TA

# சீஷராக்க தைரியப்படுங்கள் : விசுவாசிகளை குருத்துவத்தில் நடத்திட செயல்முறை படிகள் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** எது முக்கியமான காரியமென்று நினைக்கிறீர்கள், முதலாவதாக இயேசு பின்வரும் பகுதிகளான அமெரிக்கா கேனடா மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு பகுதி ஆப்ரிக்கா, ஆசியா பிலிப்பைன்ஸ் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் உள்ள கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்கிறார். இயேசு கூறினார், "நீங்கள் போய் சீஷர்களை ஏற்படுத்துங்கள்." சீஷர் என்றால் என்ன? எப்படி சீஷர்களை ஏற்படுத்த முடியும்? இன்றைக்கு எனது விருந்தினரான ராபி கேலட்டி அதை நமக்கு சொல்ல இருக்கிறார், இவர் 3,200 அங்கத்தினர்களை உடைய சபையின் மேய்ப்பராக இருக்கிறார், நான்கு காலை ஆராதனைகள் நடக்கும், இருந்தாலும் தனிப்பட்ட நபராக வருடந்தோறும் ஏழு முதல் எட்டு பேரை சீஷர்களாக உருவாக்குகிறார். அவர்கள், மாறுத்தரமாக, மற்றவர்களை சீஷர்களாக உருவாக்குகிறார்கள். சரி, இதுவரை நீங்கள் யாரையும் சீஷராக உருவாக்காதிருந்தால், இதை செயல்படுத்துவது சாத்தியம் தானா? நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய செயல்முறை காரியங்கள் என்ன? இன்றைக்கு இந்த ஜான் அன்கெர்பெர்க் சிறப்பு தொகுப்பில் அதை தெரிந்துகொள்ள இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இயேசுவின் பிரதான கட்டளையை குறித்து பார்த்துகொண்டு இருக்கிறோம், இதை கேட்டுகொண்டிருக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் அவர் கொடுத்திருக்கும் கட்டளை,

நீங்கள் புறப்பட்டு போய் சீஷர்களை உருவாக்க வேண்டும். அதை எப்படி செய்ய முடியும்? இதை செயல்படுத்திடும் நடைமுறை காரியங்களை பற்றிதான் இப்போது பார்த்துகொண்டு இருக்கிறோம். இதை உலகம் முழுவதிலும் உள்ள ஜனங்கள் பார்த்து கொண்டிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியும். பல இடங்களில் இருந்து கருத்துக்களை பெறுகிறோம் டேஹ்றான், ஈரான், ஹான்காங்ல இருந்தும், சிங்கபூர், அப்பறம் இந்தியா, ஐரோப்பிய நாடுகள், ஆப்ரிக்காவில் இருந்தும், பிலிப்பைன்ஸ், தென் அமெரிக்காவில் இருந்து வருகிறது. இது உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்களுக்கானது. நம் எல்லாரும் இயேசுவிடமிருந்து இந்த கட்டளையை பெற்றிருக்கிறோம் புறப்பட்டு போய் சீஷர்களை உருவாக்க வேண்டும். நாம் ஒரு பிரபலமான வேதாகம போதகரை அழைத்திருக்கிறோம் அவர் நம்மோடு இவற்றை பகிர்ந்திடுவார், இதை நடைமுறையில் செயல்படுத்துவது எப்படி? உங்களோடு தொடர்ந்து சந்திக்கும் நபரை எப்படி தேர்வு செய்வீர்கள்? தேவனுக்குள் வளருவதற்கான இந்த பாதையில் இணைய அவர்களுக்கு எப்படி அழைப்பு விடுப்பீர்கள்? என்ன சொல்லுவீர்கள்? அவர்களை முதல் முறை சந்திக்கும் போது நீங்கள் என்ன செய்வீர்கள்?

சரி, ராபி, நீங்க எங்களோட இருப்பதுல சந்தோஷம். போன வாரம் நாம பார்த்த விஷயங்களை சுருக்கமாக சொல்லி தொடர்ந்து பார்க்கலாம். இன்றைக்கு எதை பற்றி பார்க்க இருக்கிறோம் என்றால், சீஷர்களை உருவாக்குவதில் வேதாகமத்தின் பங்கு என்ன? ஆனா, மறுபடியும் ஆரம்பத்தில் இருந்து, வரலாம் போன வாரம் பார்க்காதவர்களுக்கு பிரயோஜனப்படும். இந்த பிரயாணத்தை எப்படி துவங்கிடுவீர்கள் முதல்ல களத்தில் இறங்குவது எப்படி, அதற்கு பிறகு என்ன செய்யணும்?

**ராபி கேலட்டி:** நீங்க முதல்ல களத்தில் இறங்கினவுடன், அதாவது உங்களுக்கு புரிந்த

பிறகு, சரியா, தேவன் நாம் போய் சீஷர்களை உருவாக்கும்படி கட்ட்டளை கொடுத்திருக்கிறார். அவர் நம்மோடுதான் இருக்கபோகிறார், ஏன்னென்றால் அவர் பிரதான கட்டளையில் நான் சீஷர்களை உருவாக்கும்போது என்னோடு இருப்பதாக வாக்கு பண்ணியிருக்கிறார். நீங்கள் யாரை சந்திக்க வேண்டும் என்று ஜெபித்திருப்பீர்கள்,

அவர்களிடமும் நீங்கள் கேட்டிருப்பீர்கள், "சீஷத்துவ குழுவில் இருக்க உங்களுக்கு ஆர்வம் இருக்கிறதா, சேர்ந்து வேதம் வாசிக்கலாமா, ஜெபிக்கலாமா, வசனங்களை மனப்பாடம் செய்யலாமா, ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்புவிப்பவராக இருக்கலாமா –

இதெல்லாம் சீஷத்துவத்தில் மிக முக்கியமானவை என்று கடந்த வாரம் சொல்லியிருந்தேன். கணக்கொப்புவித்தல் என்றால் வாழ்வில் கடுமையான கேள்விகளை கேட்கும் அதிகாரத்தை நீங்கள் ஒருவருக்கு கொடுப்பதாகும். நமக்கு அது அவசியம். ஜான், உங்களுக்கு அது அவசியம், எனக்கு அவசியம், ஒரு போதகராக எனக்கு தேவை. நம் எல்லாருக்கும் அவசியம். அதை, நீங்க புரிஞ்சுட்டீங்களா, சரி, சிலரை நான்தான் தேர்வுசெய்யணும், அதை கொஞ்ச கொஞ்சமா வடிகட்டி நாளிலிருந்து ஒரு குழுவில் மூன்றாக வந்து நிற்கணும்.

இப்ப, அப்படி செய்ததற்கு பிறகு, சரியா, நீங்க என்ன வாசிக்க போறீங்க? இங்கிருந்து எந்த நிலைக்கு போக போகிறோம்? ஒரு விசுவாசி இதை நினைவில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம், சீஷத்துவத்தீற்கு அசித்தலமாக இருப்பது வேதாகமம் மட்டுமே. நம்முடைய எல்லா செயல்களுக்கும் அது ஆணிவேராக இருக்கிறது. ஒரு சில வசனங்கள் எப்போதும் என் நினைவில் இருக்கும்: 2 தீமோத்தேயு 3:16, " வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டு இருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியைகளையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கிறது."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, இதெல்லாம் ஒரு கூட்டில் இருக்கிறது, இங்க இருக்கிறது, வேதம் ஒரு திடமான ஒன்றென்று கூறுகிறது.

**ராபி கேலட்டி:** ஆமா. அது நமக்காக கிரியை நடப்பிக்கிறதாக இருக்கிறது. எனவே, வசனத்தை நாம் பார்க்கும்போது, அந்த வசனம் நமக்காக கிரியை செய்ய போகிறது. எபிரேயர் 4:12 அடுத்த வசனம்: வேதம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போல

இருக்கிறது. வார்த்தை புறப்பட்டு போய், ஆவியையும் ஆத்துமாவையும் பிரிக்க தக்கதாக ஒருவ குத்துகிறது, எழும்பியும் ஊனையும், இருதயத்தின் யோசனைகளையும் நினைவுகளையும் வகையருகிறதாயிருக்கிறது. நமக்கு, இந்த வசனம் எல்லாம் தெரியும். அதாவது, இன்னொன்றும் இருக்கிறது, ஏசாயா 55:11, "என் வாயிலிருந்து புறப்படும் வசனம், வெறுமையாய் என்னிடத்திற்குத்திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்." இப்ப, வேதம் தாம் எல்லாவற்றுக்கும் ஆணிவேர் என்று தெரியும். வேதத்தை நாம் எப்படி வாசிக்க போகிறோம்? எதற்காக வேதத்தை படிக்க வேண்டும்?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. நாம நிச்சயம் இதை பார்க்கணும், பார்க்கவேண்டும் என்றே நினைக்கிறன்... ஒரு படி பின்னால இருந்து போகலாம், சரியா. இப்படி வேதத்தை படிப்பதற்கு, ஜனங்க கேட்கும் கேள்வி, "இதுக்கு, நாம மற்றவர்களோடு எங்கு சந்திக்க வேண்டும்? சரியா? அதை பற்றி நாம போன வாரம் பேச ஆரம்பித்தோம், நாம நேயர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறேன், எங்க முடியும்மோ அங்க சந்தியுங்கள், எது சவுகரியமா இருக்குன்னு பாருங்க. நிறையை தொழில் அதிபர்கள் மற்ற தொழில் அதிபர்களை மதிய உணவின் போதுதான் சந்திப்பார்கள்.

ஓகே. இல்ல யாரோடையாவது மதிய உணவை சாப்பிடலாம், அதுவும் உங்கள் திட்டத்தில் ஒரு பாகமாகும். மருத்துவர்களுக்கு பிரத்தியேக அட்டவணை இருக்கிறது, அவங்க மற்ற டாக்டர்களோடு சந்திக்க முடியும், செவிலியர் செவிலியர்களை சந்திக்கலாம். பள்ளி ஆசிரியர்கள் அவர்களுடைய அன்றாட நேரத்தை பின்பற்றிடலாம். ஒரு நாளில் மூன்று நிலைகள் இருக்கிறது, அதில் எப்போது வேண்டுமானாலும் அடுத்த நபரை சந்திக்க வாய்ப்பிருக்கிறது. அந்த நிலைகளை இடங்களை கண்டறியும்படி தான் நான் ஜனங்களை உற்சாகப்படுத்துகிறேன். சபையில் சந்திப்பதை பற்றி சொல்லுகிறீர்கள், ஒரு மருத்துவமனையில் கூட சந்திக்கலாம்,  பல்கலைகழகத்தில் சந்திக்கலாம், பள்ளிகூடத்தில் சந்திக்கலாம், ஸ்டார்பக்ஸ் ல சந்திக்க முடியும், பலதரப்பட்ட இடங்களில் சந்துக்க வாய்ப்பிருக்கிறது அவர்களை அழைத்திடுங்கள்,

“வாரத்தில் ஒருமுறை நாம எல்லாரும் சந்திக்கலாம், அதுக்கு மேலையும் இருக்கலாம், அங்க தேவனுடைய காரியங்களை பற்றி நாம் பகிர்ந்துகொள்ளலாம் என்றிடுங்கள். ஒருவருக்கொருவர் கணக்கொப்புவிப்பவராக இருக்கலாம் என்றிடுங்கள்.”

**ராபி கேலட்டி:** ஆமா. எங்கிட்ட இருக்கிறவர்கள் சிலர் புத்தக கடையில் சந்திக்கிறார்கள். வீட்டில் இருக்கும் தாய்மார்கள் அவர்கள் வீடுகளில் சந்திக்கிறார்கள். குழந்தைகளாய் ஒரு அறையில் விட்டுவிட்டு, அவர்கள் மற்றொரு அறையில் சேர்ந்து தியானிக்கிறார்கள். அதனால, ஒரு இடத்தை தேர்வு செய்வது மிகவும் அவசியமானதாக இருக்கிறது. ஒரு இடத்தை தேர்வு செய்வது ரொம்ப முக்கியமானதாக இருக்கிறது ஏன்னா, வழக்கமா ஒரே இடத்தில் கூடுகிற பழக்கத்திற்குள் நீங்கள் வந்திடுவீர்கள். இன்னொரு விஷயத்தை நாம சொல்ல தவறிட்டோம், அதுவும் ரொம்ப முக்கியமானதென்று நினைக்கிறேன், ஆண்களை ஆண்களையும் பெண்கள் பெண்களையும் தான் சீஷத்துவத்திற்குள் நடத்திட வேண்டும். அதுபொன்னான விதியாக இருக்கிறது. நீங்க யாருடன் சந்திக்க வேண்டும் என்ற தொடர்ந்து ஜெபித்திடுங்கள், உங்கள் மனதை அதில் பதிய வையுங்கள், அதையே யோசித்ஹ்டிடுங்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, இந்த விதியை நீங்க மீறிட கூடாது. இந்த ஒரு விதியை மீறுவதற்கு உங்களுக்கு அனுமதி இருக்கிறதென்று நினைத்துகொள்ளாதீர்கள்.

**ராபி கேலட்டி:** ஆமா, உண்மையாதான். ஜனங்கள் பொதுவாக என்னிடம் ஒரு கேள்வி கேட்ப்பாங்க, ஜான், அதாவது, “இந்த வார்த்தை ஏன் முக்கியமானதாக இருக்கிறது? நாம எதற்காக வசனத்தை வாசிக்க வேண்டும்? எதற்காக நாம் வேதத்தை தியானிக்க வேண்டும்? எந்த வித தடையின்றி போராடும் ஒரு யுக்திக்காக நான் மற்றவர்களை பயிற்றுவித்து கொண்டிருந்தேன், உங்களுக்கு இதை பற்றி தெரியுமான்னு எனக்கு தெரியல, அதாவது இந்த பசங்க எல்லாம் ஒரு கூடத்தில் கூடி சண்டை போட துவங்கிடுவார்கள். இப்ப, ஒரு விதத்தில் இது கிறிஸ்துவுக்கும் பொருந்தும், உலகத்தில் இருக்கும் போது இப்படி செய்திருக்கேன். அதாவது இந்த பயிற்சியில் ஒரு காரியத்தை

கடுமையாக செய்திடுவோம். ஒரு நாளைக்கு ஆறுமுறை சாப்பிடுவேன், காலையில பார்த்தாலும் ஜிம்ளதா இருப்பேன், சாயங்காலமும் ஜிம்ளதா இருப்பேன். என்னுடைய சரீரத்திற்கு கடைசியா என்ன குடுக்க விரும்பினேன் என்றால் கேண்டி பார்கள் அல்லது ஐஸ் கிரீம் சண்டே. அதுக்கு என்ன காரணம் என்றால், என்னுடைய சரீரத்திற்குள் கேடான எதையும் சேர்த்துக்கொள்ள நா விரும்பவில்லை நாம் என்ன செய்கிறேனோ அதை என் சரீரம் அப்படியே எனது தோற்றத்தில் வெளிப்படுத்திடும்.

இது, தேவனுடைய வார்த்தைக்கும் பொருந்தும். நம்முடைய ஆவிக்குரிய சரீரத்திற்கு தேவனிடத்தில் வரும் மன்னா தேவ அப்பத்தை கொடுக்கும்போது, தேவன் வார்த்தையை, கொடுத்தால் அது கிரியை செய்ய துவங்கிடும். மத்தேயு 4:4ல், இயேசு வனாந்திரத்தில் சாத்தானோடு இருக்கிறார். சாத்தான் இவருக்கு கொடுக்கும் முதல் சோதனையில் எப்படி சோதிக்கிறான், இயேசு நாற்பது நாள் இரவும் நாற்பது நாள் பகலும் உபவாசித்து முடித்த பிறகு, இவன் சொல்கிறான், “இந்த கல்லுகளை அப்பமாகும்படி செய்யும்.” இப்ப, இயேசு, மனுஷீகமாக பார்த்தா, பசியோடு இருக்கிறார். இப்ப இதை வைத்தே அவரை அவன் சோதிக்கிறான். ஆனா இயேசு சொல்கிற பிரதியுத்திரத்தை பாருங்க, “மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்றார்.”

இப்ப, அந்த நாட்களில் கேட்டுக்கொண்டு இருந்தவர்களை போல பழைய ஏற்பாட்டை அறிந்தவர்களாக இருந்தால், நீங்க அப்படியே யாத்திராகமம் பதினாறாம் அதிகாரத்திற்கு போயிருப்பீங்க. உடனடியா உங்களோட நினைவிற்கு வருவது அதுதான். யாத்திராகமம் பதினாறில், அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலை ஜனங்களை மோசே வாக்குத்தத்த தேசத்திற்கு அழைத்து செல்வதை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இப்ப, நமக்கு தெரிந்தது போல அவங்க பிரயாணத்தை துவங்கியதும் முறுமுறுக்கவும், குறை சொல்லவும் துவங்கினார்கள், தேவன் சொல்லியிருந்தார், “சரி, உங்களுடைய மாம்ச சரீரத்திற்கு நான் போஜனம் தருகிறேன். உங்களுக்கு நா மன்னாவை தருகிறேன். ஒவ்வொரு நாளும் நீங்க எழுந்ததும், நிலத்தில் மன்னா குவிந்திருப்பதை காண்பீர்கள். இதுல இரண்டு

விஷயங்களை அவர் மையப்படுத்தி கூறுகிறார்: ஒன்று நீங்க எழுந்து வெளியில போய் தான்மன்னாவை  சேகரிக்கவேண்டும் – மழையானாலும், பணியானாலும், கற்றடிச்சாலும், வெப்பமாயிருந்தாலும், உங்களுக்கு போகவேண்டும் என்று உணர்வில்லாவிட்டாலும், அதை செய்வதற்கு உங்களுக்கு விருப்பமில்லாவிட்டாலும், நீங்க செய்துதான் ஆக வேண்டும். இரண்டாவது அவர் என்ன சொன்னார் என்றால், அந்த மன்னாவை நீங்கள் சேகரிக்கும்போது, அது அந்த நாளுக்கு மட்டும்தான் கெட்டுபோகாமல் இருக்கும். நேற்றைய  மன்னா இன்றைக்கு நல்லா இருக்காது, இன்றைய மன்னா நாளைக்கு நல்லா இருக்காது.

இப்ப, இயேசு இந்த அப்பத்தை வார்த்தையோடு புதிய ஏற்பாட்டில் ஒப்பிடுகிறார். இரண்டு விதங்களில் இதை எடுத்துகொள்ளலாம் என்று நினைக்கிறேன், ஜான். முதலாவது என்னன்னா: நாம மாம்சீகத்தில் வார்த்தையில் நேரத்தை செலவிடவேண்டும். நமக்கு அதற்கேற்ற உணர்வு இல்லாவிட்டாலும், அப்படி செய்ய வேண்டும் என்ற விருப்பம் இல்லாவிட்டாலும், வெளியில குளுரா இருந்தாலும், வெளியில் மழை பெய்தாலும் சரி. நாம சரீரபிரகாரமா, ஒவ்வொரு நாளும், தேவனோடு அமைதியான நேரத்தை செலவிடவேண்டும். அடுத்து இரண்டாவதாக, நமக்கு ஆவிக்குரிய உணவு, ஆவிக்குரிய, நிலையில் அது இன்னைக்கு மட்டும் தான் நல்லா இருக்கும். அப்ப, நேற்றைக்கு உட்கொண்ட வார்த்தை இன்றைக்கு எனக்கு உதவிட முடியாது, நாளைக்கு நான் உட்கொள்ளபோகிற வார்த்தைகள் இன்றைக்கு எனக்கு எந்த விதத்திலும் உதவிட முடியாது. இதன் கருத்து, என்னவென்றால், ஒவ்வொரு நாளும் தேவ வார்த்தையை நாம் பெற்றிட வேண்டும். இப்ப, இதுல இருக்கும் பிரச்சனை இதுதான்: சில விசுவாசிகள் ஞாயிற்று கிழமை செய்தி மட்டும் போதும் என்று முயற்சி செய்துகொண்டிருப்பார்கள். அது சீஷத்துவ பயிற்சியில் ஒத்து வராத ஒன்றாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. இது எப்படி இருக்குன்னு கேட்டீங்கன்னா சிலர் சொல்வாங்க, “கேளுங்க, உங்களுக்கு ஒன்றை சொல்கிறேன், நீங்க ஞாயிற்று கிழமை சாப்பிடுகிறீர்கள் அப்பறம் என்ன செய்றீங்க, வாரத்தின் மற்ற நாட்களை விட்டு

விடுகிறீர்கள், அடுத்த ஞாயிற்று கிழமை பார்க்கும்போதும் அப்பா கொஞ்சம் சாப்பிட்டு கொள்வது போல இருக்கும்." ஜனங்கள் அப்படி சாப்பிடுவது இல்லை, ஒரு நாளில் மூன்று முறை சாப்பிடுகிறீர்கள். நேயர்களுக்கு ஒரு காரியத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீங்க எழுதிய இந்த புத்தகம், "தேவன் பேசுவதை கேட்பது, தேவனுக்கு செவிகொடுப்பது, "இதுல, ஒரு விஷயம் எனக்கு ரொம்ப பிடிக்கும். ஒரு நாற்காலியை அங்கு வைத்திருக்கிறீர்கள், அதுல நீங்க உட்கார்ந்து இருப்பது போல பார்க்கிறீர்கள் அங்கிருந்து, "நீர் பேசுவதை நான் கேட்கவேண்டும் தேவனே என்கிறீர்கள்."

தேவனுடைய வார்த்தையை நீங்கள் திறக்கும்போது, நீங்க தனியாகோ உங்க நண்பரோடு சேர்ந்து, சரியா, அப்படி செய்யும்போது, தேவன் உங்களோடு பேசுவதை உங்களால் பார்க்க முடியும். இப்ப, இதை ஜனங்கள் புரிந்துகொள்ள விரும்புகிறேன், ராபி, நீங்க தேவனோடு சந்திப்பை ஏற்படுத்திடும்போது, ஒவ்வொரு நாளும் நீங்க எத்தனை மணிநேரம் அவரோடு செலவிட வேண்டும்?

**ராபி கேலட்டி:** சரி. தனிப்பட்ட அமைதி நேரம் தியானம் என்பது 2o நிமிடங்களுக்கு

இருக்கணும், 30 நிமிடமாகவும் இருக்கலாம், இது தோராயமாக சொல்லப்படும் நேரம். ஒருவேளை என்னை மாதிரியும் இருக்கலாம், நானும் 20 நிமிடங்கள் என்று திட்டமிட்டு உட்கார்ந்த நாட்கள் இருக்கிறது தேவனோடு அவருடைய வார்த்தையை வைத்துகொண்டு அமரும்போது, தேவன் என்னோடு பேச துவங்கிடுவார் அவரையே என் மீது ஊற்றிடுவார், வேதத்தில் இருக்கும் காரியங்களை எனக்கு வெளிபடுத்தி காட்டுவார், அப்படியே போய் அது ஒரு மணிநேரம் அல்லது இரண்டு நேரத்தை தாண்டி விடும். ஆ னா, தேவனோடு அனுதினமும் வேரத்தை செலவிட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். நம்முடைய வாழ்க்கை முறையாக இருக்கவேண்டும். இப்ப, அதை செய்வதற்கு சிறந்த நேரம் எது? நிறைய பேருடைய கருத்து என்னன்னா, "பாஸ்டர், நாம காலையில தான் சந்திக்கணும் என்பார்கள் வேறு சிலர், "ராபி, நாம மாலையில் சந்திக்க முடியுமா?" இதற்கு என்னுடைய பதில் என்ன தெரியுமா: உங்களுக்கு எந்த நேரம் சவுகரியமா இருக்குமோ அதுதான்.

நா என்னுடைய தனிப்பட்ட தியான நேரத்தை இரவில் வைத்துகொள்கிறேன். காலியில் இருக்கலாம், அதிகாலை நேரம், காலை என்பது எனக்கு பொருந்தாது. ஆனா இரவு நேரம், உண்மையா அது பிரயோஜனமா இருக்கும். நாள் முழுவதும் முடிந்த பிறகு, ஒவ்வொரு முறையும் நா படுக்கைக்கு போகும் முன்பு, தேவனோடு ஒவ்வொரு இரவும் என் நேரத்தை செலவிடுகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இதை பற்றி நாம பார்க்கலாம், தேவனுடைய வார்த்தையில் இருந்து ஒன்றை தெரிந்துகொள்ள முதலில் நீங்கள் எப்படி துவங்கிடுவீர்கள்?

**ராபி கேலட்டி:** சரி. கடந்த சில செமிச்டர்கள் முடிந்து நா திரும்ப விமானம் மூலம் சென்றேன், என்னுடைய Ph.D படிப்பை நியூ ஆர்லியன்ஸ் செமினரியில் முடிக்கிறேன். நா சாட்டினாகோவில் இருப்பதால், வாரமா ஒருமுறை போய் வரும்படி கட்டாயப்படுத்தப்படுகிறேன், இப்ப மாதத்தில் ஒருமுறை போகிறேன். விமானத்தில் இருக்கும்போது, எனக்கு பக்கத்தில் என்னோடு ஒட்டிக்கொண்டு ஒரு பிரயாணி இருந்தார். அந்த நேரத்தை நான் பிரயோஜனமாக்கி கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தேன், பொதுவான ஒரு கணக்கெடுப்பை பற்றி அவரோடு நான் பேச துவங்கினேன். இதுல ஒரு நல்ல விஷயம் என்னன்னா, அவங்களால எங்கயும் போக முடியாது. அதனால, அவங்ககிட்ட சில கேள்விகளை கேட்க ஆரம்பித்தேன், நான் கேட்டேன், “ஏன் இன்றைக்கு ஜனங்கள் வேதத்தை வாசிக்காம இருக்காங்க?” அதற்கு அடித்ததா இரண்டாவது கேள்வியை வைத்தேன், “இன்றைக்கு நீங்க ஏ வேதத்தை வாசிக்கவில்லை என்றேன்?” அப்பதா, ஜான், பலவிதமான பதிகள் வந்தது: வேதாம் ரொம்ப பழமையானது, ரொம்ப பழசு, இந்த நாட்களுக்கு சேர்ந்ததில்ல, மரித்துப்போன நபர்களால இது எழுதப்பட்டதாக இருக்கிறது, இதுல எந்த அர்த்தமும் இல்லை. ஆனா இதுல ரொம்ப முக்கியமான மிகவும் யோசிக்க வேண்டிய பதில் இதுவாகத்தான் இருக்கிறது: எனக்கு இது எந்த அர்த்தத்தையும் கொடுக்கவில்லை, என்னால் இதை புரிந்துகொள்ள முடியவில்லை என்கின்றனர்.

நா என்ன புரிந்துகொண்டேன் என்றால், ஒரு நோக்கம் இல்லாம ஜனங்க வேதத்தை வாசிக்க தயாராக இல்லை என்பதை தெரிந்துகொண்டேன். நீங்க என்னை மாதிரி இருந்தா, ஆரம்பத்துல என்னால் வருஷம் துவங்கியதும் ஒரு வருடத்தில் வேதத்தை வாசிக்க ணுன்னு துவங்கிடுவேன். ஜனவரி மாதம் ரொம்ப ஆர்வமா இருக்கும். ஆதியாகமத்தில் இருந்து துவங்கிடுவீங்க ரொம்ப சுவாரஸ்யமா போயிட்டு இருக்கிற மாதிரி இருக்கும். யாத்திராகமம் வருவீங்க இன்னும் அந்த உற்சாகம் அப்படியே இருக்கும். அதுக்கு பிறகு லேவியராகமம் வருவீங்க இங்க அப்படி இப்படின்னு ஒரு முற்றுபுள்ளி வந்திடும். ஆமா. அதாவது இதிலிருந்து, தேவன் என்ன தான் சொல்ல வருகிறார்? அதனால நா ஒன்றை தெரிந்துகொண்டேன் ஒரு நோக்கத்தோடு வாசிக்க ஜனங்களுக்கு கற்றுகொடுத்தால், அதை வாசிப்பதில் அவர்கள் ஆர்வம் காட்டுவார்கள். இதை பற்றி தான் அந்த புத்தகத்தில் நான் சொல்லியிருக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதை எப்படி செய்வீங்க? அத, ஸ்பெல் பண்ணி காட்டுங்க.

**ராபி கேலட்டி:** சரி, நா இதற்கு ஒரு அமைப்பை உண்டாக்கினேன் ஆங்கிலத்தில் “ஹியர் என்று வரும் அதுதான் புத்தகத்தின் பெயர். அதனுடைய விளக்கம்தான் பொருள் HEAR – ஹைலைட், எக்ஸ்பிளைன், அப்ளை மற்றும் ரெஸ்பான்ட். நீங்க என்ன செய்யணுன்னா ஒரு டைரிய எடுத்துக்கணும். என்னோடு குருத்துவத்தில் இருப்பவர்களை இப்படிதான் உருசாகப்படுத்துகிறேன். ஒரு பக்கத்தின் இடது பக்கத்தில், இந்த எழுத்துக்களை எழுதிடணும் H E A R. உங்களுக்கு நேர்த்தியான வேதம் வாசிக்கும் நேரம் இருக்கணும். நா புதிய விசுவாசியாக இருந்தபோதும் இப்படி தான் வாசித்தேன். அதை நான் ஓப்ரா விதம் என்றிடுவேன், உங்களுடைய வேதாகமத்தை திறந்து, ஒரு குறிப்பிட்ட, காரியத்தை வாசித்து அப்பியாசப்படுத்துவது. ஓப்ரா- ஓபன், பைன்ட், ரீட் அண்ட் அப்பளை. நீங்க சொல்லமுடியும், “தேவனே, இன்றைக்கு இது எனக்குரியது.”

இப்ப, உங்களுடைய மாம்ச சரீரத்தில் உங்களால் அப்படி செய்ய முடியாது. அதாவது யாரும் சும்மா போய் ஒரு அலமாரியை திறந்து – ஒருவேளை கல்லூரி மாணவர்கள் அப்படி செய்திடலாம், எனக்கு தெரியல – ஆனா யாரும் சும்மா ஒரு அலமாரியை திறந்து, "இதை இன்றைக்கு இரவு உணர்விற்கு எடுத்துகொள்வேன் என்று சொல்ல மாட்டோம்." பொதுவா அதற்கு திட்டம் பண்ணிடுவோம். அதே தான் வார்த்தைக்கும் பொருந்துகிறது. அனுதினமும் வாசிக்கும் ஒரு திட்டம் நமக்கு இருக்கணும். நிறைய காரியங்களை நாம் திட்டமிடுகிறோம். புத்தகத்திலும் ஒன்றை சொல்லியிருக்கிறேன், ஆனா வேதம் வாசிக்க நிறைய திட்டங்கள் இருக்கிறது. தினமும், வேதாகமத்தை படித்து முடிப்பதற்கான அட்டவணைகள் உள்ளது.

இப்ப முதலாவது எழுத்து H, நீங்க என்ன செய்யணுன்னா வசனங்களை அடிகோடிடனும். அதாவது நீங்க வேதத்தை வாசிக்கும்போது, உதாரணமா யோவான் ஒன்றை வாசிக்கிறீர்கள் என்று வைத்துகொள்வோம், நீங்க வேதாகமத்தை வாசிக்கும்போது அந்த பக்கத்தில் என்ன வசனம் கிடைத்தாலும், பொதுவா நா வசனங்களை எழுதி வைக்க ஒஊக்குவிப்பது கிடையாது, ஒரு வசனமோ இல்ல இரண்டு, வசனமோ எழுதலாம். சரி இப்ப யோவான் 1:1 அந்த பக்கத்தில் இருக்கிறது, "ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது அந்த வார்த்தை தேவனாக இருந்தது," அடுத்த பதினாலாம் வசனம் வந்திடும், "அந்த வார்த்தை மாம்சமாகி". இங்க அவர் இயேசுவை பற்றி சொல்லுகிறார் என்று தெரியும். அப்ப அந்த வசனத்தை மேம்படித்தி காட்டனும், ஹைலைட் பண்ணுங்க, உங்க டைரில அதை எழுதி வைத்திடுங்கள்.

அடுத்ததான எழுத்து E. இது எக்ஸ்ப்லநேஷன் விளக்கமளிக்கும் பகுதி. இங்க தான் அந்த வசனத்தோடு உண்மையான யுத்தமே துவங்கிடும். அந்த வசனத்தை முன்பாக வைத்து சில கேள்விகளை நீங்கள் கேட்க்க வேண்டும், அதாவது: இந்த வசனத்தை கொண்டு இதை ஆக்கியோன் என்ன சொல்ல வருகிறார்? இதை எழுத செய்ததால் பரிசுத்த

ஆவியானவர் என்ன சொல்ல வருகிறார்? இப்படி செய்கிறதால அங்க சொள்ளபட்டிருக்கும் கருத்தை நீங்க புரிந்துகொண்ட எழுதிட உதவிடும்.

இப்ப, ஒரு குறிப்பை தருகிறேன், இந்த கட்டத்தில் நம்மிடம் ஸ்டடி பைபிள் இருந்தால் நன்றாயிருக்கும். நமக்கு சில ஒத்த வாக்கியம் மற்றும் விளக்கவுரைகள் இருந்தாலும் பிரயோஜனமாக இருக்கும் இன்டர்நெட்டை பயன்படுத்தலாம். ஒரு வசன பகுதியை புரிந்துகொள்ள உதவியாக இன்றைக்கு பலவிதமான வலைத்தளங்கள் இருக்கின்றன.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இதை அப்படியே வைத்துகொள்வோம்,

இப்போதும் ஒரு சிறிய இடைவேளை எடுத்துகொள்ளலாம் திரும்ப வந்ததும், நம்மிடம் இருக்கும் பலவிதமான வேதாகம மொழிபெயர்ப்புகளை பற்றி பேச இருக்கிறோம், ஏன்னா இந்த கட்டத்தில், ஜனங்க கேட்பாங்க, “எந்த வேத மொழிபெயர்ப்பு பயன்படுத்த சிறந்ததாக இருக்கும்? ஓகே. சரி, நேயர்களே, எங்கும் போகாதீங்க நாம திரும்ப வந்ததும் பலவிதமான வேதாகம மொழிபெயர்ப்புகள் பற்றி பேசிட இருக்கிறோம். தொடர்ந்து இணைந்திருங்கள்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக நாம் ராபி கேலட்டியுடன்

பேசிக்கொண்டு இருக்கிறோம், நமது தேசத்தின் பிரசித்தி பெற்ற வேதாகம போதகர். ஒருவரை சீஷத்துவத்தில் நடத்தும் போது என்ன செய்யவேண்டும் என்ற நடைமுறை காரியங்களை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம். கவனிங்க, நீங்க, இதை கவனமாக கவனிக்க விரும்புகிறேன், சரியா, இதை தவறாக கேட்க வேண்டாம். நீங்க ஏதோ எண்ணத்தில், இது வேறு யாருக்கோ உரியது என்றிடாதீர்கள். இது பாஸ்டருக்கு தான், என்னக்கு இல்லை என்றிடாதீர்கள்.” இயேசு நம் ஒவ்வொருவருக்கும் இந்த கட்டளையை கொடுத்திருக்கிறார், கிறிஸ்தவரான நம்மை, புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கிட சொல்லுகிறார். நாம நம்ம பக்கத்து வீட்டுகாரரை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம்; சபையில் இருக்கும் நமது நண்பரை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம்;

வேலை ஸ்தலத்தில் நம்மோடு இருப்பவரை பற்றி பேசிகொண்டிருக்கிறோம்; பள்ளியில் இருக்கும் ஒருவரை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம்; உங்களாலும் இதை செய்ய முடியும்.

என்னுடைய வாழ்வின் மிகப்பெரிய தீர்மானம் என்னவென்று தெரியுமா இறுதியாக நான்," சரி, ஆண்டவரே, நா இதை செய்வதால எந்த பலனும் இருக்குமான்னு எனக்கு தெரியாது. இருந்தாலும் நீங்க என்னை போகும்படி சொல்றீங்க, நா போறேன் நான் போய் இதை முயற்சிக்கிறேன் என்று சொல்வதாகும்." சரியா. தேவன் என்னோடு இடைப்பட்ட விதத்தையும் என் மூலமாக தேவன் கிரியை செய்ததையும் தேவன் வசனங்களை பயன்படுத்திய விதங்களையும் கண்டு நான் ஆச்சரியப்பட்டு இருக்கிறேன். ஆதாவது நீங்க துடன்கீட்ட மட்டும் போதும், இயேசு அந்த நடுவில் வந்து அங்க இருக்கிறார் என்பதை நீங்கள் பார்க்க முடியும். நம்முடைய வாழ்வில் கிரியை செய்த அதே தேவன் நீங்கள் சீஷராக்க முயலும் நபரின் வாழ்விலும் கிரியை செய்வார்.

சரி, ஜனங்கள் பொதுவாக எப்போதும் கேட்கும் கேள்விகளை பற்றி பார்க்க இருப்பதாக சொல்லியிருந்தோம். சிறந்த வேத மொழிபெயர்ப்பு எது, ராபி? நா வேதாகமத்தை பயன்படுத்தினா, அதாவாது ஸ்டடி பைபிள பயன்படுத்தினா, எதை பயன்படுத்துவது நல்லது?பலதரப்பட்ட காரியங்களை பற்றி இப்போது பார்க்கலாம். ஆங்கிலத்தில் நிறைய இருக்கிறது, முதலாவதாக, பழைய கிங் ஜேம்ஸ் வர்ஷன் இருக்கிறது, அதற்கு பிறகு நியூ கிங் ஜேம்ஸ் வர்ஷன் வந்தது, அதுக்கு பிறகு நியூ அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் பைபிள், அடுத்து இப்ப NIV – நியூ இண்டர்நேஷனல் வர்ஷன் – அப்பறம் நியூ இங்க்லீஷ் வர்ஷன், இதுல கடைசியா ஒன்றை மட்டும் வைத்துகொள்வோம் மெஸ்ஸேஜ் அல்லது லிவ்விங் லெட்டர்ஸ் அல்லது தி லிவ்விங் பைபிள். சரி, இதை பற்றி இப்ப பார்க்கலாம். இதன் ஒவ்வொன்றின் பதிப்பு எப்படிபட்டது இதற்கிடையில் உள்ள வித்தியாசம் என்ன?

**ராபி கேலட்டி:** ஆமா, இதெல்லாம் தராசில் சருக்கிகொண்டிருப்பதுபோல் இருக்கும்,

ஜான், அபப்டித்தான் இருக்கு. இந்த பக்கம் பார்த்தா அச்சுஅசலான போளிபெயர்ப்புகள் என்றிடலாம். அதை பற்றி சொல்லன்னுன்னா பிரசித்திபெற்ற மொழிப்பெயர்ப்பான: தி

கிங் ஜேம்ஸ் வர்ஷன் அது கிரேக்க மொழிபெயர்ப்பிற்கு இணையானதாக இருக்கும் , அதோடு கூட நியூ கிங் ஜேம்ஸ் மற்றும் நியூ அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் ஒத்துபோகும். அப்படின்னா, ஒரு நபர் வேதாகமத்தை வாசிக்கும்போது, இதை மொழிபெயர்ப்பாளர்கள் மூல பாஷையின் சாராம்சத்தை தக்க வைக்க தீர்மானித்திருப்பதை அறிந்துகொள்ள முடியும்.

இப்ப இதற்கு இணையாக இருக்கும் மற்றவைகளை பார்க்கலாம், இதற்கு கொஞ்சம் முன்னால போலாம், இவற்றிற்கு இணையாக பொருத்தமாக இருப்பது என்றால் அது NIV வர்ஷன் தான், நியூ இன்டர்நேஷனல் வர்ஷன். அடிபடையில் இது எப்படிபட்டது, மொழிபெயர்ப்பாளர்கள் கிரேக்கத்தில் இருந்து எடுத்திருக்கிறார்களா, ஆராய்ந்து பார்த்தார்களா,அதையெல்லாம் வாசகர்களுக்கும் புரியும் விதமாக எளிய விதத்தில் வடிவமைத்து கொடுத்ஹ்டிருக்கிரார்களா. அதை பற்றி இன்னும் ஆழமாக போகும்போதும், நம்மால் தெளிவாக புரிந்துகொள்ள முடியும். இன்னும் நெருக்கமாக இருப்பது லிவிங் பைபிள் அல்லது தி மெஸ்ஸேஜ், அதுவும் பிரபலமான வேதாகமம் தான். இதிலெல்லாம் இதன் மொழிபெயர்ப்பாளர்கள் ஆற அமர்ந்து நிதானித்து வாசகர்களுக்கு புரியும்படி கிரேக்க பதத்தின் சாராம்சம் மாறாமல் பார்த்து மொழிபெயர்த்திருக்கிறார்கள். இதுல என்ன விஷயம் என்றால் நேயர்களுக்கு ஏற்ற விதமாக அவர்கள் எழுதுகிறார்கள். நான் பயன்படுத்துவது இங்க்லீஷ் ஸ்டாண்டர்ட் வர்ஷன். இதை நான் பயன்படுத்த காரணம், இது எல்லாவற்றிற்கும் இணையானதாகவும் யத்தார்த்தமானதாகவும் இருக்கிறது. நா வசனங்களை மனப்பாடம் செய்யும்போது, நியூ அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் வர்ஷனில் மனப்பாடம் செய்வது கடினமாக இருந்தது. அதற்கு காரணம் என்னன்னா, நியூ அமெரிக்கன் விஷன் கட்டையை போன்றது, அப்படி செதுக்கப்பட்டிருக்கிறது. அது கிரேக்க பதங்களை உட்கிரகித்து இருக்கிறது, அதை நான் எளிமையாக்க முயன்டிருக்கிறேன், ஆனா அதை புரிந்துகொள்வது சற்று கடினமாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. நமது நிகழ்ச்சியில் அதன் மொழிபெயர்ப்பாளர்கள் அத்தனை பேரையும் அழைத்திருக்கிறேன். எல்லாரும் ஒன்றாக ஒரே நிகழ்ச்சியில் பங்குபெற்றனர், சரியா? நியூ அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் வர்ஷனை பற்றி ஜனங்கள் சொன்ன கருத்து எனக்கு நினைவிருக்கிறது, “அதாவது, நாங்க கிரேக்க வார்த்தைக்கும் இணையான வார்த்தையை பயன்படுத்தி முயற்சித்து இருக்கிறோம் என்பதாக அவர்கள் சொன்னார்கள், சரியா? இருக்கட்டும், அதுல, எல்லா வார்த்தைகளும் அப்படிதான் இருக்கிறது. பிரச்சனை என்னன்னா அந்த எல்லா வார்த்தைகளையும் ஒரு வரியாக அமைக்கும்போது, அது ரம்பம் போல கனக்கிறது. அதுதான் இதன் பிரச்சனை. NIV அதை மென்மையாக சொல்ல முயல்கிறது, அதனால அவங்களால  புரிந்துகொள்ள முடியும். அவர்களிடம் ஒரு கமிட்டி இருக்குது அவங்க அப்படியே அதை மொளிபெயர்க்கிறார்கள் , இன்னொரு குழுவினர் இருக்காங்க அவங்க நம்முடைய மொழியில் நமக்கு புரிகிற மாதிரி அதை எளிய நடையில் நம்மிடம் வந்து சேரும்படி முயலுகிறார்கள். இந்த வேதாகமங்களை பார்க்கும்போது இங்க நடக்கிற காரியங்கள் இதுதான். இப்ப, ஜனங்களுடைய கேள்வி, இவற்றில் நான் எதை  பயன்படுத்திட வேண்டும்?

**ராபி கேலட்டி:** இது, மிகபெரிய கேள்வி. இதற்கான என்னுடைய பதில் என்னவென்றால் – நீங்க வாசிப்பது தான். நீங்க என்ன மொழிபெயர்ப்பை பயன்படுத்துகிறீர்கள் என்பது பொருட்டல்ல, நீங்க வாசித்தால் அது போதும். சரி, பொதுவாக நீங்க மூலபாஷையோடு ஒத்திருக்கும் ஒன்றைத்தான் விரும்புவீர்கள். ஒருவேளை நீங்க வசனத்தை ஆழமாக கற்றிட நினைக்கும் வேதாகம மாணவனாக இருந்தால், நீங்க வார்த்தையை புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு வைராக்கியமாக தேடிகொண்டிருக்கும் நபராக இருந்தால் போதும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இரண்டுமே இருந்தாலும் தப்பில்லை. ஒரு சில முக்கிய பகுதிகளை நீங்கள் பயன்படுத்தலாம் அல்லது உங்களுடைய சொந்த மொழியில் நேர்த்தியாக சொல்லப்பட்டிருக்கும்ஒன்றை பயன்படுத்திடலாம். எது எப்படி இருந்தாலும்

நீங்க கவனிக்க வேண்டியது “இந்த வார்த்தையின் உண்மையான அர்த்தம் என்ன? இந்த குறிப்பிட்ட வார்த்தைகள் என்னது? இதுதான் இதன் உண்மையான அர்த்தமா?” இப்ப, இதை தெரிந்துகொள்ள ஒரே நேரத்தில் உங்க கரத்தில் இரண்டு பதிப்புகளையும் பயன்படுத்தி கொள்ள முடியும்.

**ராபி கேலட்டி:** ஆமா, நிச்சயமாக. ஆனா முக்கியமான விஷயம் என்னவென்றால்

உங்களுக்கு சவுகரியமாக இருக்கும் மொழிபெயர்ப்பை நீங்கள் பயன்படுத்துவது நல்லது, அதை வைத்து நீங்கள் நேர்த்தியாக வாசிக்க உபயோகப்படும். எப்படி செய்கிறது என்ற காரியத்திற்கு திரும்ப வந்திடலாம். ஏன்னா வசனத்தை எப்படி வாசிக்க வேண்டும் என்று தெரிந்துகொள்வது நல்லது என்று நினைக்கிறேன், ஆனால் பொதுவா எந்த வித குறிக்கோலும் இல்லாம வாசித்துக்கொண்டு இருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ளும்போது ஜனங்கள் இடறுகிறார்கள். அதனால இந்த HEAR மெதட் உதவியாயிருக்கும். இதுல எனக்கு பிடித்த விஷயம் இருக்கு, ஜான், இது நகல்களை உண்டாக்கிடும். இதை எளிதாக நகல் படுத்ஹ்டிட முடியும். இதை நான் விளக்கி சொன்ன பிறகு, இதை எப்படி சீஷத்துவத்தில் பயன்படுத்த முடியும் என்று உங்களுக்கு காட்டுகிறேன்.

இப்ப, இந்த “H” இது ஹைலைட். வசனத்தை மேம்படுத்தி காட்டுவது. அதற்கு யோவான் 1:1ரை பார்த்தோம். “ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது அந்த வார்த்தை தேவனாக இருந்தது, அந்த வார்த்தை மாம்சமாகி.” அடுத்ததாக E அதாவது எஸ்பலநேஷன் விளக்கமளித்தல். இதற்கு என்ன அர்த்தம்? ஏன் பரிசுத்த ஆவியானவர் இதை இங்கு பயன்படுத்ஹ்டினார்? அத்தகு நீங்க சில விளக்கங்களை எழுத முடியும், “தேவன் வார்த்தையாக இருந்தால், அப்ப இயேசு ஆதியில் இருந்து தேவனோடு தான் இருக்கிறார், அப்படியென்றால், இயேசு தேவன்.” ரொம்ப எளிமையானது. அதாவது, இங்க நீங்க பரீட்சை எழுதப்போகிறது கிடையாதே, ரொம்ப எளிமையாக இருக்கட்டும்.

இப்ப “A” இதுதான் இந்த அமைப்பின் முக்கிய பகுதி, இதுதான் இதயப்பகுதி. அப்பியாசப்படுத்துதல் apply. இன்றைக்கு இந்த வார்த்தையின் அர்த்தம் என்ன? இதைவிட சிறப்பா, இன்னொரு கேள்வியும் இருக்கிறது, இது எனக்கு எப்படி பொருந்துவதாக இருக்கிறது, யோவான் 1:1ன்படி பார்க்கும்போது, “இயேசு கிறிஸ்து வார்த்தையானவர் என்றால், நான் ஒவ்வொரு முறையும் வேதத்தை வாசிக்கும்போது, நான் தேவனோடு நேரத்தை செலவிடுகிறேன்.”

அடுத்து பிரதியுத்திரம் அளித்தால் R”, இதுதான் கடைசி பகுதி. அதாவது, நா வாசித்த பகுதியை வைத்து இப்போது, நா என்ன செய்ய போகிறேன்? அது ஒரு ஜெபமாக இருக்கலாம் அல்லது செயலாககூட இருக்கலாம். இதன் அடிப்படையில் நான் என்ன எழுத முடியும் என்றால், “இயேசு கிறிஸ்து வார்த்தையாக இருந்தால் நான் தேவனோடு நேரத்தை செலவிடுவது போல அவருடைய வார்த்தையும் நேரத்தை செலவிடுவது அவசியமாக இருக்கிறது. “தேவனே, உம்முடைய வார்த்தையின் மாணவனாக இருக்க எனக்கு உதவி செய்யும்.”

இப்ப, யோசித்து பாருங்க இப்படி ஒவ்வொருநாளும் செய்தா எப்பிட் இருக்கும். அப்ப நீங்க என்னோடு சீஷத்துவ வகுப்பில் என்னை சந்திக்கும்போது, முதல் மாதம் முழுவதும் தினமும் இப்படிதான் செய்திடுவோம். ஒவ்வொரு முறையும் நாங்க கூடும்போதும் அவங்களை நான் செக் பண்ணுகிறேன். இந்த பயிற்சியை துவங்கும் போது, என்னுடைய முந்தைய சபையில் இருந்து 3 பேர் உண்மையா இருந்தாங்க, நாங்க சேர்ந்து சிந்திப்போம். அதில் இரண்டு பேர் ரொம்ப வாஞ்சையாக இருந்தாங்க, இதை பற்றி அதிக பரவசத்தோடு இருந்தாங்க, வாரத்தின் எல்லா நாட்களிலும் அவர்கள் இதை கடைபிடித்தனர். அவங்க அதை கொண்டு வருவாங்க, அதை நாங்களும் பார்ப்போம்.

ஆனா அதுல ஒருத்தர் எதற்குமே ஒத்து வராதவராக இருந்தார். அவர் சபையில் தான் வளர்ந்தார்; அவருடைய அப்பா ஒரு டீகனாக இருந்தார். அவருக்கு வசனத்தை பற்றி தெரியும், ஆனா தேவொடு ஒரு நெருங்கிய உறவு அவருக்கு ஏற்படாமல் இருந்தது, ஆனா வாழ்நாள் முழுவதும் வசனத்தை வாசித்துகொண்டே இருந்தார். அவர் எங்ககிட்ட வந்து

எங்ககிட்ட சொன்னார், “ஆ, இப்படி செய்வதில் எனக்கு விருப்பம் இல்லை.” அப்படி ஓரிரு வாரங்கள் முடிந்த பிறகு, நான் கேட்டேன், “ஜேசன், ஒரு வாரம் மட்டும் ஏன் முயற்சி பண்ணி பார்க்க கூடாது. அப்படி உங்களுக்கு பிடிக்கலைன்னா, அந்த வாரத்தின் இறுதி வரைக்கும், நீங்க முயற்சி செய்து பார்த்தும் உங்களால அதை முடிக்க முடியாவிட்டால், ஒருவேளை அப்பவும் நீங்க, நா முயற்சி செய்தேன், எனக்கு பிடிக்கலன்னு சொல்லுங்க என்றேன்.” அந்த வாரம், ஜான், அவர் வந்தார், என்னால மறக்கவே முடியாது.
அவருடைய நோட்டு புக்க திறந்தார், நாங்க சாப்பிடுவதற்கு முன்பே அவர் பேச துவங்கினார், அவர் உட்கார்ந்து எங்களிடம் சொன்னார், “கைஸ், இதை உங்களிடம் நான் சொல்லியாகனும், தேவன் இந்த வாரம் என்னோடு என்ன பேசினார தெரியுமா.” அப்ப நான் நினைத்தேன், அவர் பிடித்துகொண்டார். அவராளையே இது முடியுன்னு சொன்னா எல்லாராலும் முடியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, அவங்க பகிர்ந்துகொள்ளும் நேரம் எனக்கு ரொம்ப பிடிக்கும், ஏன்னா அவங்க பகிர்ந்துகொள்ளும் காரியங்களை கேட்கும்போது அவைகள் என்னோடும் பேசுவதாக இருக்கும். உங்கள பத்தி எனக்கு தெரியாது, ஆனா என்னால சொல்ல முடியும், இது இரண்டு பக்கமும் பேசுகிறது.

**ராபி கேலட்டி:** ஆமா, நிச்சயமா. வசனத்தை வாசிப்பது மட்டும் போதாது, வசனத்தை மனப்பாடமும் செய்ய வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. எப்படி வசனங்களை மனப்பாடம் செய்வீர்கள்? ஒரு கிறிஸ்தவராக மாறிய பின்பு நீங்கள் கண்டறிந்த விஷயங்கள் என்ன? நீங்க எப்படி வசன்னகளை மனப்பாடம் செய்ய துவங்கினீர்கள்?

**ராபி கேலட்டி:** சரி. நா எப்படி வசனத்தை மனப்பாடம் செய்தேன் என்றால் டேவிட் மற்றும் டிம் இருவரும் நீ கண்டிப்பா இதை செய்தாகவேண்டும் என்று சொன்னதினால். வசனங்களை மனப்பாடம் செய். ஆனா, சபைகளில் இன்றைக்கு நான் பார்க்கிற

வருத்தமான ஒன்று, விசுவாசிகள் வசனங்களை மனப்பாடம் செய்வது கிடையாது. நிறைய விசுவாசிகளுக்கு வசனத்தை பற்றி நன்றாக தெரியும், ஆனால் அதை அவர்கள் புரிந்துகொள்வது கிடையாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஏன் அவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டும்?

**ராபி கேலட்டி:** என்னை பொறுத்தவரை வசனத்தை மனப்பாடம் செய்வதற்கு காரணம்

அது ஜீவனுள்ளதாகவும் வல்லமையுள்ளதாகவும் இருக்கிறது. நம்முடைய வாழ்வின் பிரச்சனைகளுக்கு அது உதவுகிறது. வேதம் சொல்கிறது, "ஏற்ற நேரத்தில் சொல்லபப்ட்ட வார்த்தை வெளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு சமானம்." அப்படின்னா, அந்த வார்த்தையை ஜனங்களிடம் பேசனும், நம்மில் எத்தனை பேர் சில சூழ்நிலைகளில் இருக்கும்போது யாராவது வந்து தேவ வார்த்தையை சொல்ல மாட்டார்களா என்று இருந்திருக்கிறோம், அப்பா தேவ வார்த்தை நமது நினைவிற்கு வரணுமே? இப்ப, நாம் கற்றுக்கொண்ட காரியங்களை நினைப்பூட்டுவதாக வேதம் நமக்கு வாக்கு பண்ணுகிறது. நினைவிருக்கட்டும், இயேசு சொல்கிறார், ஏற்ற நேரத்திற்கு தேவையானவைகளை நான் உனக்கு நினைப்பூட்டுவேன் என்று கூறுகிறார்." இப்ப, சில நேரங்களில் வசனம் இல்லாம தேவனே நேரடியாக பேசிடுவார், ஆனா வசனத்தில் மூலமாகவும் பேசுவதாக அவர் நமக்கு வாக்கு பண்ணியிருக்கிறார், மேலும் நமக்கு எது ஞாபகப்படுத்தப்பட வேண்டுமோ அதை சரியா ஞாபகப்படுத்துவதாகவும் வாக்கு பண்ணியிருக்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உங்களோடு டீபேக் உதாரணம்  எனக்கு ரொம்ப

பிடிச்சிருந்தது, சரி. ஒரு கப்பிலிருக்கும் தண்ணீர் நீங்க வேதம் ஒரு டீபேக், அந்த டீபேக இந்த அதன்நீரில் போட்டா, அந்த தண்ணீரின் நிறம் மாறும் அதோடு டீபேகில் உள்ள சாரம் அனைத்தும் இந்த தண்ணீருக்குள் இறங்கிவிடும். அந்த அளவிற்கு நீங்க வந்துட்டீங்கன்னா, இறுதியில் இந்த கப் முழுவதும் டீயின் சாரத்தால் நிரம்பிடும். நீங்க தேவனுடைய வார்த்தையை வாசிக்க துவங்கி அதை மனப்பாடம் செய்திட்டால், உண்மையில், அது உங்கள் வாழ்க்கையாக மாறிடும். அது உங்களுக்குள் இருக்கும், அது

உங்களை மாற்றும், அது உங்களை மருரூபமாக்கிடும். பவுல் கூடுகிறார், “மனதை புதிதாக்கிடுங்கள்.” அதை தேவ வார்த்தையை வாசிப்பதினால் மட்டுமே செய்ய முடியும்.

சரி, நேயர்களே, தேவனுடைய வார்த்தையை புரிந்துகொண்டு எப்படி செயல்படவேண்டும் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளும்விதமாக சில நடைமுறை காரியங்களை உங்களோடு பகிர்ந்திருக்கிறோம், எப்படி மற்றவர்களை சீஷர்களாக்குவது. அடுத்த வாரம் இதன் அடுத்த நிலையை பார்க்கலாம், நாம் வேதாகமத்தை பற்றி மட்டுமே பேசிட இருக்கிறோம், ஆனால் சீஷத்துவத்தில் ஜெபத்தை எப்படி செயல்படுத்துவது என்பதை குறித்தும் நாம் பார்க்க இருக்கிறோம். நீங்க எப்படி ஜெபிப்பிரீர்கள்? தேவன் எப்படி ஜெபங்களுக்கு பதில் கொடுக்கிறார்? அதற்கான சில உதாரணங்களையும் வைத்திருக்கிறோம் எபப்டி தேவன் அர்ப்புதவிதமாக, எப்படி தேவன் அதிசயவிதமாக, எளிமையான ஜெபத்திற்கு பதில் தருவார், சாதாரண மக்கள் சிலர், தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதன் அடிப்படையில் ஜெபிக்கிறார்கள். சரி, அதை பற்றி நாம் அடுத்த வாரம் பார்த்திடலாம். தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.